DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.250/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.3 |
| Name | :பிரசாத் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2023

-----

(எதிரிகள் 1, மற்றும் 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் கல்கொண்டான்பட்டி காலனியின் குடியிருக்கிறேன. நான் டிரைவராக வேலை செய்கிறேன். 14.04.2014ம் தேதி மாலை 4.30 மணிக்கு மூக்கன் தோட்டத்தில் ஒச்சாத்தேவர் மகன் சரவணன், அவரது மனைவி பாப்பு, அவரது மகன் பிரபு, அவரது அண்ணன் நல்லதம்பி, நல்லதம்பி மனைவி, ஒச்சம்மாள் ஆகியோர்கள் அருவாள், கம்புகளை வைத்து எனது அப்பாவை வெட்டினார்கள். சித்தப்பா ஸ்டீபனை பிரபு அருவாளால் தலையில் வெட்டினார். நல்லதம்பி கம்பியால் இடது கையில் அடித்தார். தம்பி ஆசீர்வாதத்தை சரவணன் அருவாளால் தலையில் வெட்டினார். பின்பு

ஒச்சாத்தேவர் கையில் இருந்த கம்பியால் ஆசீர்வாதத்தை கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். என்னை பிரபு அருவாளால் தலையில் வெட்டினார். பின்பு நல்லதம்பி கம்பியால் கையில் அடித்தார். பாப்பு மற்றும் ஒச்சம்மாள் ஆகியோர்கள் என்னை கம்பால் மாறி மாறி அடித்தார்கள். பின்பு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன்பின்பு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். காட்டப்படும் கம்பு தான் ஒச்சாத்தேவர் மனைவி பாப்பு மற்றும் ஒச்சம்மாள் மாறி மாறி அடித்தார்கள் அது சா.பொ.6.

**குறுக்கு விசாரணை: இல்லை.**

/sd/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 14.07.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.